நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில், குன்னூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம்.ராஜு கோத்தகிரி ஒன்றியம் மற்றும் கோத்தகிரி பேரூர் கழக பகுதிகளில் கழக நிர்வாகிகளுடன் சென்று வாக்களித்து வெற்றிபெறசெய்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

திருவாரூரில் மே 31 அன்று எனது தலைமையில் ஆர்ப்பாட்டம்!

மேகதாது அணை கட்டும் முன்னெடுப்பு தமிழ்நாட்டைப் பாலைவனமாக்கும் ஆபத்து!

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி அறிக்கை!

சென்னை, மே 25-

மேகதாது அணை கட்டும் முன்னெடுப்பு தமிழ் நாட்டைப் பாலைவனமாக்கும் ஆபத்து எனவும், பிரச்சினையை வளரவிட்டுத் தீர்க்க முடியாது! உச்ச நீதிமன்றம் உரிய அக்கறை காட்டியிருக்க வேண்டும் என்றும், இது அரசியல் பிரச்சினையல்ல; தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை! கருநாடகாவின் பிடிவாதத்தையும், ஒன்றிய அரசு, உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் மெத்தனப் போக்கையும் கண்டித்து திராவிடர் கழகத்தின் சார்பில் திருவாரூரில் மே 31 அன்று எனது தலைமையில் ஆர்ப்பாட்டம் என்றும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

காவிரியின் பாதையில் இந்தியாவின் மிகப்பெரிய அணைக் கட்டுகளில் ஒன்றான கிருஷ்ணராஜ சாகர் அணை 1931 இல் கட்டப்பட்டு ஏறத்தாழ 12,000 ஹெக்டேர் விவசாய நிலங்கள் பயன்பட்டு வருகின்றன. அதன் பிறகு 1960 முதல் 1980 வரை அடுத்தடுத்து கபினி, ஹேமாவதி, ஹரங்கி, சுவர்ணாவதி ஆகிய பெரிய அணைகள் கட்டப்பட்டு, தமிழ்நாட்டுக்கு வரும் தண்ணீரின் வரத்து குறையத் தொடங்கியது.

60 ஆண்டுகளுக்கும் மேலான உரிமைப் போராட்டம்!

அதிக மழை வெள்ளம் என்றால் மட்டும் அணையைத் திறந்து விடுவதும் (Drainage outlet), மற்ற நேரங்களில் நியாயமாக வழங்கப்பட வேண்டிய உரிய அளவைக் கூட வழங்க மறுப்பதுமாக கருநாடகத்தை ஆளும் எந்தக் கட்சியின் அரசாக இருந்தாலும் நடந்து கொண்டு வந்து தமிழ் நாட்டை வஞ்சித்த சூழலில் தான், இதற்கொரு நடுவர் மன்றம் அமைத்துத் தீர்வு காணவேண்டுமென்று திராவிடர் கழகம் முன்மொழிந்து, ஏராளமான போராட்டங்களுக்குப் பிறகு அது அமைக்கப்பட்டு, அதன் தீர்ப்பு நெடுங்காலம் தள்ளிப் போடப்பட்டு, பின்னர் உச்சநீதி மன்றத்தின் மூலமும் தமிழ் நாட்டின் உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 60 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த உரிமைப் போராட்டத்தில் தமிழ் நாட்டில் தி.மு.க, அ.தி.மு.க. என ஆண்ட கட்சிகள் இரண்டும், அதன் தலைவர்களும் வேண்டிவற்றைச் செய்து நமது உரிமைகளை நிலைநாட்டியுள்ளனர்.

காவிரிப் பிரச்சினைக்கான உச்சநீதிமன்றத் தீர்ப்பும் வெளிவந்து, இப் பிரச்சினை ஒரு வழியாக ஓய்ந்தது என்ற நிலையில் தான் புதிதாக மேகதாது அணை கட்டுகிறோம் என்றொரு பிரச்சினையைக் கிளப்பினர் கருநாடக அரசியல்வாதிகள். காங்கிரஸ், பா.ஜ.க., மதச்சார்பற்ற ஜனதா தளம் என்று அங்கிருக்கும் கட்சிகள் அனைத்தும் தமிழ் நாட்டை வஞ்சிக்கும் இவ் விவகாரத்தில் முந்துவது யார் என்றே இதை அரசியல் பிரச்சினையாக்கி உள்ளனர்.

தமிழ்நாட்டிற்குள் காவிரி நுழையும் ஒக்கேனக் கல்லுக்கு 15 கிலோ மீட்டர் முன்பு ராம்நகர் மாவட்டம், ஆடு தாண்டும் காவிரி என்னும் பகுதியில் அணை கட்ட வேண்டும் என்ற இந்தப் பரிந்துரையை வைத்து கடந்த 11 ஆண்டுகளாக அங்கு அரசியல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காவிரியில் இரண்டு மாநிலங்களும் புதிதாக எந்த அணை கட்டுவதாக இருந்தாலும், காவிரி நதிநீர் மேலாண்மை வாரியத்தின் ஒப்புதல் இல்லாமல் கட்டக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தின் ஆணை ஏற்கெனவே இருக்கிறது. மேகதாது அணை திட்டத்திற்குத் தன்னிச்சையாக சுற்றுச் சூழல் அறிக்கை தயாரிக்கும் முயற்சி, ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு என்றெல்லாம் கடந்த காலங்களில் கருநாடக அரசுகள் முயற்சித்த போது தமிழ் நாடு சட்டரீதியாக முறையிட்டுத் தடுத்துள்ளது.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி...

மேகதாது அணைத் திட்ட அறிக்கையை 2018இல் மத்திய நீர்வள ஆணையத்திடம் கருநாடக அரசு தாக்கல் செய்தது, இதை எதிர்த்து தமிழ்நாடு அரசு நீதிமன்றம் சென்றது. திட்ட அறிக்கைக்கு அனுமதி அளிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் கருநாடகா அனுமதி கேட்டது. கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களும் இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தை நாடினர். கடந்த 2025 நவம்பரில் இது தொடர்பாக ஆணையிட்ட உச்சநீதிமன்றம், "காவிரி நதி நீர் மேலாண்மை வாரியம், காவிரி நதி நீர் ஒழுங்காற்று ஆணையம் ஆகியவற்றின் ஒப்புதல் பெற்றால் தான் கருநாடகா அடுத்து மத்திய நீர்வள ஆணையத்தின் ஒப்புதலை நாட முடியும். எனவே, இன்னும் இரு ஆணையங்களும் அது குறித்து முடிவெடுக்காத நிலையில் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாடியிருக்க வேண்டிய அவசியமில்லை" என்பதாகத் தீர்ப்பு வழங்கியது. கருநாடக அரசு அடுத்தடுத்து மேற்கொளும் நகர்வுகளுக்குத் தடை விதிக்காமலும், இப் பிரச்சினையை நீட்டிச் செல்லும் வகையிலும் இத் தீர்ப்பு அமைந்துவிட்டது. அந்தத் தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி தமிழ்நாடு அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு அளிக்கப்பட்டிருந்த சூழலில், கடந்த ஏப்ரல் 15 அன்று உச்சநீதிமன்றம் வழக்கை முடித்து வைத்தது. அதன் தீர்ப்பு விவரம், நேற்று (23.5.2026) தான் இணையத்தில் வெளியாகி உள்ளது. "காவிரி தொடர்பான இரு ஆணையங்களும் எந்த முடிவும் எடுக்காத நிலையில் இப்போதும் அதைத் தடுப்பதற்கான தேவை எழவில்லை" என்று கூறிதான் உச்சநீதிமன்றம் மீண்டும் தீர்ப்பளித்துள்ளது.

இந்நிலையில் கருநாடக அரசின் துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் அவர்கள், "காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டும் கருநாடக அரசின் திட்டத்தை எதிர்க்க தமிழ் நாடு அரசுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், விரிவான திட்ட அறிக்கையை ஒன்றிய அரசிடம் வெகுவிரைவில் தாக்கல் செய்து, அனுமதி பெற்று மேகதாது அணைக்கு அடிக்கல் நாட்டுவோம்" என்றும் கூறி யிருப்பது இப் பிரச்சினையை மேலும் வலுவாக்குகிறது.

தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய பாசன நீர் முற்றிலுமாகத் தடுக்கப்படும் ஆபத்து உள்ளது!

இதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது; கூடாது. இது தமிழ்நாட்டின் வாழ்வாதாரப் பிரச்சினை. 20 மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமாகவும், காவிரி டெல்டா மாவட்டங்களின் விவசாயத்தின் அடித்தளமாகவும் இருப்பது காவிரி நதிநீர் தான். தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 177 டி.எம்.சி நீரைத் தந்ததற்குப் பிறகு, கருநாடகத்தின் மேகதாது அணைத் திட்டத்தை எதிர்க்கும் உரிமை தமிழ்நாட்டுக்கு இல்லை என்று அவர் கூறியிருப்பது உண்மைக்கு மாறானது. உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கும் மாறானது. மழை, வெள்ளக் காலங்களில் கருநாடக அணைகளால் நீரை அடைத்து வைக்க முடியாது என்ற சூழலில் திறந்துவிடப்படும் உபரி நீரை இந்தக் கணக்கில் சேர்க்கக் கூடாது. அப்படிப்பட்ட சூழலில் வரும் நீரைத் தாங்குவதற்காக மேட்டூரில் இருந்து நாமும் நீரைத் திறந்துவிட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே கருநாடகாவின் இந்த வாதம் பொருளற்றது; நியாய மற்றது. சுமார் 67 டி.எம்.சி (TMC) கொள்ளளவு கொண்ட இந்த அணை கட்டப்பட்டால், தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய பாசன நீர் முற்றிலுமாகத் தடுக்கப்படும் ஆபத்து உள்ளது.

பிரச்சினையைப் பெரிதாக்கி, கருநாடகா மாநில அரசியல்வாதிகள் அம் மக்களின் எண்ணவோட்டத்தை வளரவிட்டு, அதை அரசியல் முழக்கமாக்கிய பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் இதனைக் கருதக் கூடாது. அது இரு மாநிலத்தின் அமைதிக்கும், மாநிலம் கடந்து வாழும் மக்களின் நலனுக்கும் விரோதமாகி விடும் என்பதை உச்சநீதிமன்றம் உணர்ந்திருக்க வேண்டும்.

ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது!

'தாயும் பிள்ளையும் ஒன்று என்றாலும் வாயும் வயிறும் வேறு' என்பது எளிய கிராமத்துப் பழமொழி. ஆனால், அது சொல்லும் செய்தி வலிமையானது. 'உறவுக்குக் கை கொடுப்போம் என்பது உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்பதையும் சேர்த்ததே! சமூகநீதி, மாநில உரிமைகள், மதவாத எதிர்ப்பு, திராவிடப் பண்பாட்டுப் பாதுகாப்பு என்ற அளவில் கருநாடகத்துடன் நாம் இணைந்து செயல்படுவதும், அவர்களின் உரிமைக்கும் நாம் குரல் கொடுப்பதும் வேறு; அதே நேரத்தில், தமிழ்நாட்டின் மடியில் கைவைத்து, நியாயமாக நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கை மறுத்து, மொத்தமாகத் தமிழ்நாட்டைப் பாலைவனமாக்கும் திட்டமாகவே மேகதாது அணை திட்டம் அமையும். அதை ஒருபோதும் நாம் அனுமதிக்க முடியாது.

கருநாடகா அரசின் இத்தகைய நிலைப்பாடு களை, ஒன்றிய பா.ஜ.க. அரசும் வேடிக்கை பார்க்கிறது. காங்கிரசுக்கு மாற்றாக அங்கு ஆட்சியைப் பிடிக்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் அரசியல் கணக்கு அது! மாநில அரசியலைக் கருத்தில் வைத்து, ஒன்றிய அரசின் கடமையிலிருந்து பா.ஜ.க. நழுவப் பார்க்கிறது.

தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டும் வகையில் மிகக் கவனமாகத் தமிழ்நாடு அரசு இப் பிரச்சினையில் நடந்துகொள்ள வேண்டும்,

திருவாரூரில் மே 31 இல் எனது தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம்!

தமிழ்நாட்டின் உரிமைகளை அபகரிக்கத் துடிக்கும் கருநாடக அரசின் பிடிவாதப் போக்கையும், அதைத் தடுத்து நிறுத்தத் தவறிய ஒன்றிய அரசின் துரோகத்தையும் தமிழர்கள் ஒருபோதும் சகித்துக் கொள்ள மாட்டார்கள். நமது வாழ்வாதார உரிமைப் போர் இது! திராவிடர் கழகத்தின் சார்பில் இதனை வலியுறுத்தி, திருவாரூரில் வரும் மே 31 ஞாயிற்றுக்கிழமை அன்று எனது தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். (கோடை வெப்பம் காரணமாக சரியாக 9 மணிக்குத் தொடங்கி, 10 மணிக்குள் நிறைவடையும் வகையில் ஆர்ப்பாட்டம் திட்டமிடப்பட்டுள்ளது).

இந்த ஆர்ப்பாட்டத்தில் திருவாரூர், நாகப்பட்டினம், காரைக்கால், மயிலாடுதுறை, மன்னார்குடி, கும்பகோணம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர், அரியலூர், சிதம்பரம், கடலூர், விருத்தாசலம், புதுச்சேரி மாவட்டங்களிலிருந்து தோழர்களும், டெல்டா பகுதியினர், ஒத்தக் கருத்துள்ளவர்களும் பெருமளவில் கலந்துகொள்வார்கள்.

நெய்வேலி தொகுதியில் சபா.இராஜேந்திரன் நன்றி தெரிவித்தார்!

கடலூர்,மே 25-

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட ,

பண்ருட்டி வடக்கு ஒன்றியம், திருவாமூர், எலந்தம்பட்டு, சிறு வத்தூர், எஸ்.எரிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நெய்வேலி சட்டமற்ற தொகுதி வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன், தனக்கு ஆதரவாக வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நன்றி நிகழ்ச்சியில் பொதுமக்களிடையே உரையாற்றிய சபா.இராசேந்திரன், நமது திமுக கழகம் பார்க்காத வெற்றியும் இல்லை, பார்க்காத தோல்வியும் இல்லை. வெற்றியிலும் தோல்வியிலும் மக்களுடன் உறுதியாக நின்ற கழகம் இது. எனவே, எப்போதும் பொதுமக்களுக்கு உதவ நான் காத்திருக்கிறேன். உங்களுக்கு எந்த உதவி தேவையானாலும் நேரடியாகவோ அல்லது நமது நிர்வாகிகள்மூலமாகவோ என்னைத் தொடர்பு கொள்ள லாம். உங்களுக்காக நான் எப்போதும் உள்ளேன்" என்று உறுதியளித்தார்.

இந்த நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் சபா. பாலமுருகன், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் சந்தோஷ் குமார், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றியச் செயலாளர் குணசேகரன், ஒன்றிய அவைத் தலைவர்கள் ராஜா, சிவகுமார், மாவட்டப் பிரதிநிதி பூபாலன், மைனர் ராஜசேகர், மாசிலாமணி, அருள்ஜோதி ஜெகஜீவன் ராம், முன்னாள் கவுன்சிலர் தேவராஜ், இளைஞரணி அமைப்பாளர் அன்பரசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி ஞானசேகர், விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் உத்தமன், திருமலை செல்வம், ஆனந்த் செல்வராஜ், பாலமுருகன், சேகர், ஞானவேல், வழக்கறிஞர் பக்தவச்சலம், கலியபெருமாள், பலராமன், முருகன், சங்கர், காசிராஜன், செல்வம், ராமர், சங்கர், சுகுலாச்சாரி, ஆனந்த், ராமதேவன், முருகன், தங்கவேல், சுப்பிர மணியன், ராமநாதன், தாமோதரன், பழனிச்செல்வன், இராம.வெங்கடேசன், ஜே.சடையப்பன், நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஸ்டாலின், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாக்கிய ராஜ் டாக்டர் செந்தில், தினகரன் உள்ளிட்ட திமுக மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.

நெய்வேலி தொகுதியில் வீதி வீதியாகச் சென்று கழக வேட்பாளர் சபா. இராஜேந்திரன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி - 26.05.2026

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., இ. பரந்தாமன் ஆகியோர் கீழ்க்கண்டவாறு கள ஆய்வு மேற்கொள்கின்றனர்.

ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர்	நேரம்	நிகழ்விடம்
வாலாஜா நகரம்	காலை 10.00	மாஸ் மஹால், வாலாஜா
வாலாஜா கிழக்கு		
வாலாஜா மத்திய		
இராணிப்பேட்டை	காலை 12.00	தி.மு.க மாவட்ட அலுவலகம், பாரதிநகர்
மேல்விஷாரம் நகரம்		
அம்மூர் பேரூர்		
ஆற்காடு மேற்கு	பிற்பகல் 3.00	M.K. மருத்துவமனை, தாழனூர்

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 24.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி, கடையநல்லூர் ஆகிய சட்டமன்றத் தொகுதியில் உட்பட்ட கழக நிர்வாகிகளுக்கான கள ஆய்வுப் பணி ஜூன் 1,2 ஆகிய தேதிகளில் மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பின்படி நடைபெறுகிறது.

அதன்படி ஜூன் 01.06.2026 ம் தேதி தென்காசி சட்டமன்றத் தொகுதிக்கு இலஞ்சி டிரஸ்ஸில் மஹாலில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, கழக அயலக அணி துணைச்செயலாளர் சேலம் உமாராணி ஆகியோர் பங்கேற்று கள ஆய்வுப் பணி மேற்கொள்கின்றனர்.

02.06.2026 அன்று கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு அச்சம்பட்டி எஸ். எஸ்.கிராண்ட் மஹாலில் வைத்து நடைபெறுகிறது.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 24.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதா ஜீவன் அறிவிப்பின்படி சட்டமன்ற தொகுதி களஆய்வுக் குழுவினர் ச. முரசொலி எம்.பி (தஞ்சை வடக்கு ஒன்றியச்செயலாளர்) செ.உமாராணி (கழக அயலக அணி துணைச்செயலாளர்) ஆகியோர் கீழ்க்கண்ட விவரப்படி மேற்கொள்கின்றனர்.

சட்டமன்ற தொகுதி	நாள்	இடம்
விளாத்திகுளம்	27.05.2026 காலை 9 மணி முதல்	ஜி.வி.மஹால், விளாத்திகுளம்
கோவில்பட்டி	30.05.2026 காலை 9 மணி முதல்	ஜெயஸ்ரீமஹால், கோவில் பட்டி
தூத்துக்குடி	31.05.2026 காலை 9 மணி முதல்	கலைஞர் அரங்கம், தூத்துக்குடி

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 24.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் சட்டமன்ற தொகுதி, வானூர் மத்திய ஒன்றியம், கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு நன்றி தெரிவித்து, சிறப்புரையாற்றினார். உடன் வானூர் சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் ஏ.மாரிமுத்து, பிரேமா குப்புசாமி, வானூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.மைதிலி ராஜேந்திரன், வானூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் உஷா முரளி, பொதுக்குழு உறுப்பினர் டி.ஆர்.இளங்கோவன், ஆர்.எஸ்.வாசன் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், BLA 2, BDA, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.